பாடம் - 3
நோன்பை முறிப்பவை

الدرس الثالث
مفسدات الصوم

1.உண்பது, குடிப்பது: மறதியாக உண்டால், குடித்தால் அது நோன்பை முறிக்காது.

((مَنْ نَسِيَ وَهُوَ صَائِمٌ فَأَكَلَ أَوْ شَرِبَ فَلْيُتِمَّ صَوْمَهُ فَإِنَّمَا أَطْعَمَهُ اللهُ وَسَقَاهُ)) (م/١١٥٥)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'யாரேனும் நோன்பிருந்த நிலையில் மறதியாக உண்டால் அல்லது குடித்தால் அவர் நோன்பை (முறிக்காமல்) நிறைவு செய்யட்டும். ஏனெனில் அல்லாஹ் அவருக்கு உணவளித்துள்ளான், தண்ணீர்ப்புகட்டியுள்ளான்.' (முஸ்லிம்-1155)

மூக்கு வழியாக தண்ணீர் வயிற்றினுள் சென்றுவிடுவது, நரம்பு வழியாக உணவு, இரத்தம் செலுத்துவது. இவையனைத்தும் நோன்பை முறிக்கும். காரணம் இவை நோன்பாளிக்கு உணவாக அமைகின்றன.

2.உடலுறவு கொள்வது: நோன்பாளி உடலுறவு கொண்டால் நோன்பு முறிந்து விடும். அவர் நோன்பைக் கழாச் செய்வதுடன் பரிகாரமும் செய்ய வேண்டும்.

- அதாவது ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டும்.
- அதற்கு இயலவில்லை யெனில் தொடர்ந்து இரண்டு மாதங்கள் நோன்பு நோற்க வேண்டும். இவ்விரண்டு மாதங்களில் மார்க்க ரீதியான அல்லது உடல் ரீதியான காரணம் இன்றி நோன்பை விட்டுவிடக்கூடாது. மார்க்க ரீதியான காரணம் என்பது ஹஜ்ஜுப் பெருநாளும் அதை அடுத்து வரக்கூடிய அய்யாமுத் தஷ்ரீக் எனப்படும் 11, 12, 13 ஆகிய மூன்று நாட்களும் ஆகும். உடல் ரீதியான காரணமென்பது வியாதி, நோன்பை விடவேண்டுமென்ற நோக்கமின்றி பயணம் செய்தல் ஆகியவையாகும். எந்தக்காரணமுமின்றித் தொடராக நோன்பு நோற்பதை ஒருவன் விட்டு விட்டால் அது ஒரு நாளாயினும் சரி-தொடர் உண்டாவதற்காக அவன் மீண்டும் புதிதாகத் தொடர்வது அவசியமாகும்.
- தொடராக நோன்பு நோற்க இயலவில்லை எனில் 60 ஏழைகளுக்கு உணவு வழங்கவேண்டும்.

3.விந்தை வெளியேற்றுதல்: முத்தமிடுதல், சுய இன்பத்தில் ஈடுபடுதல் போன்ற காரணங்களால் இந்திரியத்தை வெளியேற்றுதல். இவ்வாறு செய்பவன் நோன்பை கழா செய்ய வேண்டும். பரிகாரம் தேவையில்லை. கனவின் மூலம் விந்து வெளியானால் நோன்பு முறியாது.

4.இரத்தத்தை வெளியேற்றுதல்: அதாவது (ஆரோக்கியம் கருதி) இரத்தம் குத்தி எடுப்பதற்காகவோ இரத்ததானம் செய்வதற்காகவோ இரத்தத்தை வெளி யேற்றுதல்.

இரத்தப் பரிசோதனைக்காக எடுக்கப்படும் குறைவான இரத்தம் நோன்பை முறிக்காது. இவ்வாறே சுயவிருப்பமின்றி மூக்கிலிருந்தும், காயம், பல் பிடுங்குதல் போன்றவற்றால் வெளியேறும் இரத்தம் நோன்பை முறிக்காது.

5.வாந்திஎடுத்தல்: வேண்டுமென்றே வாந்தி எடுத்தால் நோன்பு முறிந்து விடும். சுயவிருப்பமின்றி வாந்தி வந்தால் நோன்பு முறியாது.
நோன்பை முறிக்கும் இக்காரியங்களில் ஒன்றை நோன்பாளி, மறதியின்றி தெரிந்தோ வேண்டுமென்றோ செய்தால் அவரது நோன்பு முறிந்துவிடும்.
அது குறித்த மார்க்கச் சட்டத்தை அறியாமல், அல்லது நேரம் தெரியாமல்- உதாரணமாக பஜ்ரு இன்னும் உதயமாகவில்லை என எண்ணி, அல்லது சூரியன் மறைந்துவிட்டதெனக் கருதிச் செய்தால் அல்லது மறதியாகவோ, நிர்பந்த மாகவோ செய்தால் அவரது நோன்பு முறியாது. கழாச் செய்வதும் அவசிய மில்லை.

6.மாதவிடாய், பிரசவ இரத்தம் வெளியாதல்: ஒரு பெண் எப்போது மாதவிடாய், பிரசவ இரத்தத்தைக் காண்கிறாளோ அப்போதே அவளது நோன்பு முறிந்துவிடும். மட்டுமல்ல இந்த நேரத்தில் நோன்பு நோற்பது ஹராமாகும். ரமழானுக்குப் பின்னர் விடுபட்ட நோன்புகளைக் கழா செய்வது அவள் மீது கடமையாகும்.